# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109758

1. District / மாவட்டம் : திருச்சி.  PS / காவல்நிலையம் : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு  Year / ஆண்டு : 2022  FIR No. / மு.த.அ. எண் : 11  Date / நாள் : 03.10.2022

2. (i) Act சட்டம்: Prevention of Corruption  Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Act 1988 (as amended in  Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: 2018)  Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day / குற்ற நிகழ்வு நாள்  Date from / நாள் முதல் : 28.09.2022  Date to / நாள் வரை : 01.10.2022.
Time Period / நேர அளவு :  Time from / நேரம் முதல் : 1100 hrs.  Time to / நேரம் வரை : 1500 hrs.
(b) Information Received at PS. Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 03.10.2022  Time / நேரம் :
(c) General Diary Reference : Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : —  Time / நேரம் :

4. Type of Information : Written/ Oral / தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : சுமார் 60 கிமீ தெற்கு.
Beat Number / முறைக் காவல் எண் :
(b) Address / முகவரி : 1) திரு. சுப்ரமணியன் த/பெ நாராயணசாமி மணப்பட்டி என்பவரின் வீடு 2) வட்டாட்சியர் அலுவலகம், மருங்காபுரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —  District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  மாவட்டம்

6. Complainant /Informant (a) Name / குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : N. சுப்ரமணியன்
(b) Father's/ ~~Husband's~~ Name / தந்தை / கணவர் பெயர் : நாராயணசாமி
(c) Date / Year of Birth / நாள் / பிறந்த ஆண்டு : 18/12/1963
(d) Nationality / நாட்டினம் : இந்தியன்
(e) Passport No. / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : —
Date of Issue / வழங்கப்பட்ட நாள் : —
Place of Issue / வழங்கப்பட்ட இடம் : —
(f) Occupation / தொழில் : விவசாயம்
(g) Address / முகவரி : No.3/163, மணப்பட்டி, காரைப்பட்டி (PO), மருங்காபுரி (TK) திருச்சி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திருமதி. லட்சுமி, வட்டாட்சியர், மருங்காபுரி வட்டம், திருச்சி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

KV-Shanthi 3.10.22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

03/10/22

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ......................
Rank: நிலை ...... No. எண் ......

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/2022-இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......**

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளராகிய நான், இன்று 03.10.2022 பணியில் இருந்த போது காலை 10.00 மணியளவில் திருச்சி மாவட்டம், மருங்காபுரி தாலுகா, காரைப்பட்டி அஞ்சல், மஞ்சம்பட்டி நெம்பர் 3/163 என்ற முகவரியில் வசித்து வரும் நாராயணசாமி மகன் நா.சுப்ரமணியன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், மருங்காபுரி தாலுகா, வட்டாட்சியர் திருமதி.லட்சுமி மற்றும் புகார்தாரர் திரு.சுப்ரமணியன் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 03.10.2022 காலை 12.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.11/2022 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)-ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் நா.சுப்ரமணியன், த/பெ நாராயணசாமி, நெம்பர்.3/163, மஞ்சம்பட்டி, காரைப்பட்டி போஸ்ட், மருங்காபுரி தாலுக்கா, திருச்சி மாவட்டம். பெறுநர் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி. அய்யா, நான், திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி வட்டம், காரைப்பட்டி கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு உடன் பிறந்தவர்கள் இரண்டு அக்காவும் ஒரு அண்ணனும் ஆவார்கள். எனது அண்ணன் சுந்தரம் எல்.ஐ.சி.யில் பணிபுரிந்தார். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். எனது மனைவி பெயர் சுமதி. எனக்கு ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். அவர்களுக்கு திருமணமாகிவிட்டது. எனது அப்பா திரு.நாராயணசாமி பெயரில் மஞ்சம்பட்டி கிராமத்தில் மூங்கில் குளம் அருகில் சுமார் 5 ஏக்கர் விவசாய நிலமும், துவரங்குறிச்சி - செந்துறை செல்லும் சாலையில் சுமார் 7½ ஏக்கர் விவசாய நிலமும் ஆக மொத்தம் சுமார் 12½ ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. இந்த நிலத்திற்குள்ளேயே எனக்கு வீடும் அமைந்துள்ளது. எனது அப்பா இறந்து 24 வருடங்கள் ஆகிறது. இன்னும் பாகப்பிரிவினை செய்து கொள்ளவில்லை. இந்த நிலம் முழுவதும் எனது பராமரிப்பில் உள்ளது. விவசாயத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தினை நாங்கள் பங்கிட்டு கொள்வோம். மேற்படி துவரங்குறிச்சி - செந்துறை செல்லும் கிழமேலான சாலையில் உள்ள சுமார் 7½ ஏக்கர் விவசாய நிலத்தினை ஒட்டினார்போல் மின்கம்பங்களின் மின்கம்பிகள் அமைந்துள்ளது. அந்த கம்பிகளின் அருகில் அமைந்துள்ள மரங்களின் கிளைகள் மின்கம்பிகளில் உரசிக்கொண்டிருந்தது. அதன்காரணமாக பெரிய மின்விபத்து ஏதும் நிகழ்ந்துவிடக்கூடாது என்ற எண்ணத்தில் மின் கம்பிகளில் உரசிக்கொண்டிருந்த மரங்களின் கிளைகளை ஆட்களை வைத்து கடந்த 25.9.2022 அன்று வெட்டிவிட்டேன். அதற்கு பிறகு, கடந்த 28.9.2022 அன்று காலை

சுமார் 11 மணிக்கு மருங்காபுரி தாசில்தார் திருமதி.லட்சுமி அவர்கள் என்னை வந்து சந்தித்து, என்னை கேட்காமல் மரங்களை எப்படி வெட்டலாம், என்று சத்தம்போட்டார். அதற்கு நான் மின்கம்பியில் உரசிய மரங்களின் கிளைகளைதான்மா வெட்டினேன், மின் விபத்து ஏதும் யாருக்கும் ஆகிடக்கூடாதேன்னு, நல்லது தானேம்மா செஞ்சேன் என்று சொன்னேன். அதற்கு தாசில்தார் லட்சுமியம்மா, அதெல்லாம் முடியாது, உங்கமேல நான் போலீசுல புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்காம விடமோட்டேன் என்று கூறினார். அதற்கு நான் தெரியாம பண்ணிட்டேன்மா, இந்த ஒரு தடவ என்னை விட்டுடுங்கம்மா என்றேன். அதற்கு தாசில்தார் லட்சுமியம்மா, அப்படின்னா எனக்கு 30 ஆயிரம் ரூவா கொடுத்திடுங்க. உங்கமேல எந்த நடவடிக்கையும் இல்லாம பாத்துக்கிறேன் என்று சொல்லிவிட்டு, பணத்தோட ஆபீஸ்ல வந்து பாருங்க என்று சொல்லிவிட்டு போய்விட்டார். நான், என்ன செய்வதென்று தெரியாமல் 1.10.2022 அன்று மதியம் சுமார் 3 மணிக்கு மருங்காபுரி தாலுக்கா ஆபீஸ் போய் அங்கிருந்த தாசில்தார் திருமதி.லட்சுமியை அவரது ரூமிற்கு சென்று சந்தித்தேன். அப்போது தாசில்தார் லட்சுமி என்னிடம் பணம் கொண்டு வந்திங்களா என்று கேட்டார். அதற்கு நான் விவசாயம் ஒன்னும் சரியில்லாம ரொம்ப கஷ்டத்தில இருக்கேம்மா, என்னால அவ்ளோ பணம் கொடுக்க முடியாதும்மா என்று சொன்னேன். அதற்கு தாசில்தாரம்மா, ரொம்ப புலம்பாதீங்க, பத்தாயிரம் கொடுத்தீங்கன்னா, உங்கமேல ஒன்னும் பிரச்சனை இல்லாம பாத்துக்கறேன். இதுக்குமேல என்னால கம்மிபண்ண முடியாது, திங்கக்கிழமை பணத்தோட வந்து என்ன பாருங்க என்று சொன்னார். நான் வேறு வழியில்லாமல் அப்போதைக்கு அவரிடம் சரியென்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். என்னிடம் லஞ்சம் கேட்ட மருங்காபுரி தாசில்தார் திருமதி.லட்சுமிமீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd.xxx (நா.சுப்ரமணியன்) 3-10-22 Submitted to the Court of Hon'ble Special Judge, Special court for the Prevention of Corruption Act-1988, Trichy. Received this report at 10.00 hrs on 03.10.2022 and made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.11/2022 u/s 7(a) of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) at 12.00 hrs on 03.10.2022. Sd.xxx (G.Manikandan) 03.10.2022 Dy.Supdt of Police, V&AC, Trichy.

03/10/22
(G.MANIKANDAN)
DSP. V&AC.
TRICHY.